மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.3/19

வாக்குமூலம். வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | ஜாதி | |
| த/பெ. | அண்ணாமலை | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 37 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 18.03.2024-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1.நான் என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் இடத்தை விற்க கூடாது என்று வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன். எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டு இருக்கிறேன் என்றால் 2 இலக்க சொத்துக்களுக்கு வழக்குபோட்டு இருக்கிறேன். தாவா சொத்துகளின் புலஎண் என்னவென்றால் 9/2 மற்றும் 2/7 ஆகும். 2 ம் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 23 ஏர்ஸ் ஆகும். ஆதியில் மேற்படி சொத்து காளி மகன் நடேசனுக்கு சொந்தம் என்றால் சரிதான். அவரிடம் இருந்து கிரையம் வாங்கினோம்.

2. எந்த தேதியில் கிரையம் வாங்கினோம் என்றால் எனது தகப்பனார் நான் சிறுபிள்ளையாக இருக்கும்போது கிரையம் வாங்கினார் அது எனக்கு ஞாபகம் இல்லை. மீண்டும் அந்த சொத்தை விற்று விட்டார். மாரிமுத்து கோனார் என்பவரிடம் சொத்தை விற்றுவிட்டார் நாங்கள் மீண்டும் பணம் கொடுத்து கிரையம் வாங்கினோம். நாங்கள் கிரையம் வாங்கியதாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. இரண்டாவது அயிட்ட சொத்தை பொறுத்து நான் கிரையம் வாங்காததால் தான் அதை பொறுத்து என்னால் ஆவணம் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் காளி மகன் நடேசன் என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றாலும் அவர் இறந்தபிறகு அவரது அஞ்சலையிடம் இருந்து 2 ம் பிரதிவாதி 08.05.1997 ல் 2 ம் பிரதிவாதி சுப்பிரமணியபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணஎண். 173/1997 படி கிரையம் வாங்கினார்

என்றால் சரியல்ல.

3. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு 2 வதுஅயிட்ட சொத்தில் 2 வது பிரதிவாதி கிரைய பாத்தியம் மூலம் பட்டா மாற்றிக்கொண்டு அனுபவம் செய்கிறார் என்றால் சரியல்ல. 2 வதுஅயிட்ட சொத்தை பொறுத்து 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தின் அடிப்படையில் தான் 2 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனது அக்கா திருமணத்திற்காக எனது அப்பா 2 ம் பிரதிவாதியிடம் கிரையம் கொடுத்தார். தாவா சொத்துக்கு என் பெயரில் கிரைய ஆவணமோ பட்டவோ அனுபவமோ இல்லாத நிலையில் வழக்கு சொத்துக்கு நான் நிரந்தர தடையாணை பரிகாரம் கோருவது நிலைநிற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்படாத சொத்தை 2 ம் பிரதிவாதியிடம் இருந்து அபலாபம் அடைவதற்காக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தில் நான் வீடு கட்டி குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல இருக்கிறது.

4. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தாவா 2 வது அயிட்ட சொத்து புஞ்சை வகைப்பாட்டு நிலம் என்றாலும் அதில் 2 ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதியுடன் 2 ம் பிரதிவாதி கூட்டாக செயல்படவேண்டிய அவசியம் கிடையாது என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்து 2 ம் பிரதிவாதிக்கு தனித்த உரிமையுடைய சொத்து என்பதால் அதைபொறுத்து கிரைய பாராதினங்கள் செய்ய 2 ம் பிரதிவாதிக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பொதுகுடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 2 வதுஅ யிட்ட சொத்தை பொதுகுடும்ப வருமானத்தில் இருந்து கிரையம் பெற்றதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. நான் 2 வது அயிட்ட சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லும் கிரைய தேதியை என்னுடைய நிரூபணவாக்குமூலத்திலோ வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ள ஆவண எண். 1 படி என் தகப்பனார் கிரையம் வாங்கிய தேதியில் எனக்கு 4 வயது என்றால் சரிதான். வழக்கு ஆவண எண் 2 படி 2 வது அயிட்ட சொத்துக்கு 2 ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தை 2 ம் பிரதிவாதி காளி மகன் நடேசன் வகையறாவிடம் இருந்து கிரையம் வாங்கியதால் தான் அவர் தனித்த அனுபவத்தில் இருந்து அவர் பெயருக்கு தனிப்பட்ட ஏற்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. அதனால் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. மறுவிசாரணையில்லை.